# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 152/2017

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | ரவிச்சந்திரன் |
| Father's Name | : | லட்சுமணன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**எதிரி ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் ஆண்டாங்கோவிலில் குடியிருந்து கிருஷ்ணராயபுரம் தலுகா, பிள்ளாபாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். பழனிச்சாமி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது, அவருடன் நான்

உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். பழனிச்சாமி தற்போது இறந்துவிட்டார். 19.03.2017 ம் தேதி ஆண்டாங்கோவில் கீழ்பாகத்தில் கிராம நிர்வாக அலுவலராக பழனிச்சாமி வேலை பார்த்தபோது அவருடன் நான் உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் சுமார் 12.00 மணியளவில் கரூர் – மதுரை பைபாஸ் சாலையில் பெரியார் வளைவு அருகில் லாரியில் திருட்டு மண்ல் வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்படி அங்கு சென்றோம். அப்போது TN 40 D 7322 என்ற சென்னம்மாள் என்று எழுதப்பட்ட லாரியில் மணல் இருந்தது. அந்த லாரியை நிறுத்தி விசாரித்தபோது அந்த லாரியின் ஓட்டுனர் பெயர் பிரகாஷ் என கூறினார். சுமார் 3 யூனிட் மணலுக்குண்டான அனுமதிச் சீட்டை கேட்டபோது இல்லை என்றும் ஒப்புக்கொண்டு மணலை காவிரி ஆற்றுப் படுகையிலிருந்து கூலி ஆட்கள் மூலம் மணலை ஏற்றி வந்ததாக கூறினார்.

2. பின்னர், கிராம நிர்வாக அலுவலர் உடன் நானும், லாரி ஓட்டுனரையும், மணலுடன் கூடிய லாரியையும் காவல் நிலையத்தில் ஆஜர் படுத்தி பிரகாஷ் மீது நடவடிக்கை எடுக்குமாறு கூறி கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்தார். புகார் மனுவில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள மணலுடன் கூடிய லாரி அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் படிவம் 91ல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் பழனிச்சாமி விஏஓ கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**